# ஜீவ யாத்திரை முடிவும்வரை..

ஆண்டவராகிய இயேசு, பரலோகத்திற்கு எழுந்தருள முன்பாக, தம் முடைய சீஷனாகிய சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். ஒரு முறையல்ல மூன்று தடவைகள் சீமோன் பேதுருவினிடத்திலே கேட்டார். மேலும், நீ இளவயதுள்ளவனாயிருந்த போது உன்னை நீயே அரைகட்டிக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய் நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய் வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக அவனைக் குறித்த அழைப்பின் மேன்மையை அறிந்து இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். ஒருவேளை நாம் ஊழியர்களாகவோ, விசுவாசிகளாகவோ இருக்கலாம். ஆணாக இருக்கலாம் அல்லது பெண்ணாக இருக்கலாம் நாமெல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றோம் (கலாத்தியர் 3:28). நித்திய ஜீவனுக்கென்று ஒரே அழைப்பை பெற்றிருக்கின்றோம். இந்த பூவுலகத்திலே வாழும் நாட்களிலே எங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகள் வெவ்வேறாக இருக்கலாம். ஒருவேளை ஊழியத்திலும், உதவி ஊழியத்திலும், நமக்கு கொடுக்கப்பட்ட மற்றய பொறுப்புகளிலிருந்து நாம் ஓய்வுபெற வேண்டிய நாட்கள் வரலாம் ஆனால் நம் சுவாசம் நம்மில் இருக்கும்வரை, நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களாயிருக்கின்றோம் என்பதை மறந்து விடக்கூடாது. சீமோன் பேதுரு தன் மரணபரியந்தமும் கர்த்தரை மகிமைப்படுத்தும்படிக்கு அழைக்கப்பட்டது போல, நாமும் நம்முடைய வாழ்க்கை முடியும் வரைக்கும், நாம் செய்யும் செயல்கள் வழியாக நம்முடைய பிதாவாகிய தேவனுடைய நாமமானது மகிமைபடுத்தப்பட வேண்டும். இந்த ஜீவ யாத்திரையின் பதையில் ஜீவனுள்ள நாட்களெல்லாம் நம்மோடு இருக்கின்ற தேவ ஆவியான வர்தாமே மரணபரியந்தம் நம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்தி, நாம் தேவனுடைய நற்சாட்சிகளாக விளங்கும்படிக்கு செய்வராக.

**சங்கீதம் 48:14**

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

**ஜெபம்**: உலகம் முடியும்வரைக்கும் உங்களோடிருப்பேன் என்ற கூறிய தேவனே, என் இறுதி மூச்சுவரைக்கும் நான் உமமுக்கு பிரியமுள்ள பிள்ளையாக வாழ என் முதிர்வயதிலும் என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | ஐப்பசி 2 — 📖 மாலை வாசகம் - எபே 2:4 –10

# பேர் சொல்லி அழைத்த தேவன்

> **ஏசாயா 43:1**
>
> **பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.**

தேவனுடைய ஜனங்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், பல ஆண்டு காலமாக தங்களை அழைத்த சர்வ வல்லமையுள்ள தேவனை மறந்து போனார்கள். தங்களுக்கு தாபரமாக இருந்து வந்த உன்னதமான தேவடைய வாழ்வுதரும் ஜீவனுள்ள வார்த்தைகளை அற்பமாக எண்ணி, உயிரற்ற விக்கிரகங்களை நோக்கிப் பார்த்தார்கள். அவர்களுடைய கடினமான இருதயத்தினாலும், பொல்லாத வழிகளினாலும், அவர்கள் அடிமைத்தனத்திற்குட்படுத்தப்பட்டார்கள். உன்னதமான தேவனின் கோபம் அவர்கள் மேல் பற்றியெரிந்தது. யார் அவர்களை சர்வ வல்லமையுள்ள தேவனுடைய கைக்கு தப்புவிக்கக் கூடும்? ஒருவராலும் கூடாது. ஆனால், கிருபை நிறைந்த தேவன் அவர்கள்மேல் மனதுருகினார். பல ஆண்டு காலமாக பாவத்தில் வாழ்ந்திருந்தும், தங்கள் பொல்லாத வழிகளிலிருந்து மனம்திரும்பி, தேவனை நோக்கி பார்த்த போதெல்லாம், அவர் மனதுருக்கமுள்ளவராக இருக்கின்றார். இவ்வண்ணமாக அவர் நெருக்கத்திலிருக்கும் தம்முடைய ஜனங்களை நோக்கி: உன்னைச் சிருஷ்டித்தவரும், உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன் உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன் என்றார். நம்முடைய வாழ்விலும் இக்கட்டும் நெருக்கங்களும் ஏற்படுவதுண்டு. சில வேளைகளிலே தேவனுடைய வார்த்தையை கேளாதபடிக்கு நம்முடைய செவிகளை நாம் அடைத்துவிடுவதுண்டு. இதனால் தம்முடைய மிகுந்த கிருபையினாலே நம்மை இரட்சித்த தேவனை மறந்து, கண்போன போக்கிலே நடந்து பல கண்ணிகளுக்குள் சிக்கி, நம்முடைய வாழ்விலே பல இன்னல்களையும், துன்பங்களையும் வரவித்துக்கொள்கின்றோம். அந்த வேளைகளிலே, நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, நம்முடைய பாவ வழிகளிலிருந்து மனந்திரும்பி, அவரை நோக்கிப் பார்க்கும் போது: நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன் நீ ஆறுகளைக் கடக் கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக் கும்போது வேகாதிருப்பாய் அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது என்று கூறிய தேவன், நம்மை நம்முடைய எல்லா இடுக்கண்களிலிருந்து விடுதலையாக்கி, தீமைகளை நன்மைகளாக மாற்றி நம்மை நடத்திச் செல்வார்.

**ஜெபம்:** என்னை பேர் சொல்லி அழைத்த தேவனே, உம்மைவிட்டு விலகிப் போகும் இருதயத்தை என்னை விட்டு அகற்றி, உம்முடைய வழிகளிலே நடக்கும் உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அடியேனை நியாந்தீர்க்காதிரும்

ஒரு கிராமமொன்றிலே வசித்து வந்த வாலிபனொருவன், தன் நண்பர் களோடு சேர்ந்து ஒரு குற்றச் செயலைலொன்றைச் செய்த் போது அந்த கிராமத்தின் மனிதர்களிடம் அகப்பட்டுக் கொண்டான். அவனைக் குறித்த காரியத்தை ஆராய்தறிந்து அவனுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று தீர்மானிப்பதற்காக அந்தக் கிராமத்தின் மூப்பர்கள் கூடி வந்திருந்தார்கள். அந்த வேளையிலே அந்த வாலிபனுடைய தாயார், மூப்பர் சங்கத்திலுள்ளவர்களை நோக்கி: ஐயா பெரியவர்களே, என்னுடைய மகனுடைய விஷயத்திலே அவனுடைய குற்றத்தின்படி அவனை கடுமையாக தண்டியாமல், அவனுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை கொடுக்கும்படி உங்களது கருணையைக் காண்பிக்க வேண்டுகின்றேன் என்று பணிவோடு வேண்டிக் கொண்டாள். இந்த உலகிலே வாழும் மனிதர்கள் நீதிமன்றங்களுக்கு செல்லும் போது, சில வேளைகளிலே, குற்றம் செய்தவர்கள்கூட தங்களை நிரபராதிகள் என்றும், வேறு சிலர் குற்றம் செய்யாதவர்களை குற்றவாளிகள் என்று எதிர்த்தும் வாதம் செய்கிதை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த உலகிலே யார் நீதியுள்ளவர்கள்? யார் அநீதியுள்ளவர்கள் என்று வரையறுக்கும்படி சட்டங்கள் உண்டு. ஆனால் நீதியுள்ள நியாயாதிபதியாகிய தேவனாகிய கர்த்தரின் முன்னிலையில் யார் தன்னை நீதிமானாகக் கருத முடியும்? (சங்கீதம் 7:11). தேவனுக்கு முன்பாக, எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, (ஏசாயா 64:6). அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை. தேவனைத் தேடுகிறவன் இல்லை. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:10-12). தேவ கிருபையினாலே இரட்சிக்கப்பட்டு, விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்றோம். தேவனுடைய சந்நிதியிலே நம்முடைய கிரியைகளைக் குறித்து மேன்மை பாராட்ட நமக்கு இடமில்லை. எனவே தாவீது ராஜா தனக்கு ஏற்பட்டிருக்கும் இடுக்கண் வேளையிலே, தேவன் முன்னிலையிலே தன்னைத் தாழ்த்தி, கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும் என் நீதியின் நிமித்தமல்ல, உம்முடைய கிருபையின் நிமித்தம் என்னை கண்ணோக்கியருளும் என்று விண்ணப்பம் செய்தார். அதுபோலவே நாமும் நம் நெருக்கத்தில் தேவ சமுகத்திலே நம்மைத் தாழ்த்தி அவருடைய இரக்கத்தை நாடுவோம்.

**சங்கீதம் 143:2**

**ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்.**

**ஜெபம்**: என் புகலிடமான தேவனே, என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். என்னுடைய கிரியைகளின்படி நீர் எனக்கு சரிக்கட்டாமல், உம்முடைய கிருபையின்படி என்னை கண்ணோக்கிப் பார்த்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# செம்மையான வழியிலே நடத்தும்

"நான் வெகுவாய் ஒடுக்கப்பட்டிருக்கின்றேன். என் இருதயம் எனக்குள் சோர்ந்துபோகிறது. என் பெலவீனங்கள் என்னை நெருக்குகின்றது. அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. தேவனை நோக்கிப் பார்க்க எனக்கு பெலனில்லை. எந்த முகத்தோடு தேவனுடை சமுகத்திற்கு செல்வேன்" என்று ஒரு மனிதனானவன் தன் நிலைமையைக் குறித்து தனக்குள் வருந்திக் கொண்டிருந்தான். இந்த நிலைமையிலே தன் அறைவீட்டிற்குள் முடங்கிப் போயிருக்கும் அவன் செய்யக்கூடிய காரியம் என்ன? மேலே அவன் தனக்குள் கூறிக் கொண்ட வார்த்தைகளுக்கு முன்னதாக, "அன்புள்ள பரம பிதாவே" என்ற வார்த்தையை கூறி, தன் உண்மை நிலையை அவருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசு, தங்களை நீதிமான்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த மனிதர்களை நோக்கி: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். அதாவது சிலர் தாங்கள் தூய்மையானவர்கள், பாவம் இல்லாதவர்கள் என்றும் தங்களை தாங்களளே நீதிமான்கள் என்று எண்ணி தாங்கள் போட்டுக் கொண்ட வட்டத்திற்குள் வாழ்கின்றார்கள். அது மட்டுமல்லாமல், பாவத்திலே தவித்துக் கொண்டு விடுதலையடைய முடியாமல் இருக்கும் மனிதர்கள் அழிந்து போகும்படியாக விரும்புகின்றார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசுவோ ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி யாவரையும் தம்மிடத்திலே அழைக்கின்றார். பாவிகள் தொடர்ந்து பாவத்தில் வாழும்படிக்கு அல்ல தேவ ஆவியானவரின் துணையோடு செம்மையான வழியிலே நடக்கும்படி அவர்களுக்கு வழிகாட்டுகின்றார். ஒருவேளை நீங்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அகப்பட்டு, உங்கள் அக்கிரமங்கள் உங்கள் தலைக்கு மேலாகப் பெருகியிருந்தால். இன்று, உங்களைத் தாழ்த்தி, தேவனை நோக்கி ஜெபம் செய்யுங்கள். உங்கள் உண்மை நிலையை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களை செம்மையான வழியிலே நடத்தும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 143:10**

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

**ஜெபம்:** அன்புள்ள பரம பிதாவே, என் நிலையை அறிந்தவரே. உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்; உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை எல்லா இடுக்கண்ணிற்கும் நீங்கலாக்கிவிடும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என்னிடத்தில் நன்மை உண்டு

ஐயா போதகரே, பல தசாப்தங்களாக ஊழியம் செய்து வந்தீர்களே, உங்களுடைய ஊழிய நாட்களிலே அநேக ஆத்துமாக்களை நீங்கள் ஆதாயப்படுத்தியிருக்கின்றீர்கள். உங்கள் ஊழியமும் பெரிதான வளர்ச்சியைக் கண்டது. அதன் இரகசியம் என்ன என்று ஒரு வாலிபன், ஊழியப் பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும், நன்கு வயது முதிர்ந்த போதகரிடம் கேட்டான். மகனே, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். இது தேவனுடைய அநாதி தீர்மானம். விதைப்பில்லாமல் அறுப்பு இல்லை. விதைத்தால் மட்டும் போதாது, அதற்கு நீர்பாய்ச்சுகின்றவர்கள் அவசியம். தேவனோ விளையச் செய்கின்றார். தமக்கு சித்தமானவர்களை அறுவடைக்கு அனுப்புகின்றார். இந்த பட்டணத்திலே இயேசு என்ற நாமத்தை மனிதர்கள் அறியாது இருந்த நாட்களிலே, பல சிரமங்கள் மத்தியிலே தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், முன்னோடிகளாக வந்த மிஷனரிகள், தேவனுடைய வார்த்தையை விதைத்தார்கள். சிலர் நற்செய்திக்காக இரத்த சாட்சிகளாக மரித்திருக்கின்றார்கள். தேவன் குறித்த காலம் நிறைவேறிய போது, தகுதியற்ற என்னை அவர் அறுவடைக்கு ஒரு கருவியாக உபயோகித்தார். இவை யாவும் தேவனுடைய ஏற்பாடும், அவருடைய அனுக்கிரகமுமாயிருக்கின்றது. இதில் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை என்று பதில் கூறினார். பிரியமானவர்களே, கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளையும், பொறுப்புக்களையும் குறித்து நாம் பெருமை கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இன்று சிலர் அறியாமையினாலே, தங்கள் கிரியையினால் உண்டாகும் பலன் தங்கள் பிரயாசமே என்று எண்ணிக் கொள்கின்றார்கள். தங்களை குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணிக் கொள்கின்றார்கள். தேவனுடைய அநாதி திட்டத்திலே தாங்கள் ஒரு சிறிய பங்கு நம்மிடத்தில் ஏதாவது நன்மை உண்டாயிருந்தால் அது பரலோகத்திலுள்ள தேவனால் உண்டான ஈவு என்பதை உணர்ந்து தேவ சமுகத்திலே நம்மைத் தாழ்த்த வேண்டும்.

**ரோமர் 12:3**

**அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.**

**ஜெபம்:** கிருபையினாலே என்னை இரட்சித்த தேவனே, நீரே நன்மையின் ஊற்று. உம்மையல்லாமல் நான் ஒன்றும் செய்யமுடியாது என்பதை எப்போதும் உணர்ந்தவன(ளா)க இருக்க உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சரீரம் ஒன்றே

“நான் ஒரு சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தன். எனவே, எனக்கு நாட்டின் அடையாள அட்டை தேவையில்லை, சாரதி லைசன்ஸ் அவசியமில்லை. நாட்டுச் சட்டங்கள் எனக்குத் தேவையில்லை” என்று ஒருவரும் கூற முடியாது. அந்த நாட்டிலே அவன் எப்படிப்பட்ட உத்தியோகத்தனாக இருந்தாலும் ஒரு நாட்டின் பிரஜையின் கடமைகளையும் பொறுப்புக்களையும், அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய செய்து வரவேண்டும். அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் பற்றி நாம் பேசும் போது, முதன்மையாக நாம் யாவரும் நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்றவர்கள் என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. ஊழியர்களாக இருந்தாலும், விசுவாசிகளாக இருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படிக்கு, நம் வாழ்விலே நம்மை நோக்கி வரும் சவால்களை, தேவன் தரும் பெலத்தால் நாம் ஜெயம் கொள்ளும்படிக்கு விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராட வேண்டும். அநேகராகிய நாம் கிறிஸ்துவின் ஒரே சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கின்றோம். தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் கிறிஸ்துவின் சரீரத்திலே வைத்தார். அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே. நன்றாக கவனித்து தியானம் செய்யுங்கள். நாம் “கிறிஸ்துவுக்குள்” ஒரே சரீமாக இருக்கின்றோம். எனவே நாம் “கிறிஸ்துவுக்குள்” இருந்தால், அவர் பரிசுத்தராக இருப்பது போல நாமும் பரிசுத்தராக இருக்க வேண்டும். நம்முடைய கிரியைகள் அவருடைய கற்பனைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவின் சுபாவங்களை தரித்தவர்களாக வாழ வேண்டும். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம், தீர்க்கதரிசனம், ஊழியம், போதனை செய்தல், புத்தி புகட்டுதல், இரக்கங் காட்டுதல் போன்ற வெவ்வேறான வரங்களையுடையவர்களாக இருக்கின்றோம். “நான் தானதர்மம் செய்ய அழைக்கப்பட்டேன் எனவே நான் ஜெபிக்கத் தேவையில்லை, வேதம் வாசிக்கத் தேவையில்லை, சபை ஐக்கியத்திலே இணைந்திருக்கத் தேவையில்லை” என்று எண்ணுவது மிகவும் தவறானது. நித்திய ஜீவனுக்கென்று பெரிதான அழைப்பை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் நாம், தனித்துவமான வரங்களைப் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக இருக்கின்றோம் என்பதை மறந்து போகாமல், தாழ்மையுள்ளவர்களாக முன்னேறிச் செல்வோம்.

**1 கொரிந்தியர் 12:20**

**அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று அழைத்த தேவனே, நீர் எனக்கு கொடுத்த வரத்தின்படி, கிறஸ்துவின் திருச் சரீரத்தின் அவயவமாக, எனக்கு கொடுக்கப்பட்டதை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# களிகூருங்கள்...

பல சவால்கள் மத்தியிலும் கண்ணீரோடு பிரயாசப்படுகின்றவர்கள், தங்கள் விடாமுயற்சியின் பலனை அறுப்பதை நாம் இந்த உலகிலே காண்கின்றோம். கண்ணீரோடு விதை விதைக்கும் விவசாயி, அறுவடையின் நாளிலே தன் பலனை கெம்பீரத்தோடு அறுக்கின்றான் என்பதை குறித்து நாம் கடந்த மாதத்திலும் தியானம் செய்தோம். எடுத்துக் காட்டாக, படிக்கக்கூடிய சூழ்நிலைகள் இல்லாத நிலையில் பல நெருக்கங்கள் மத்தியிலும் தன் பாடங்களை சிரத்தையாக படிக்கும் மாணவர்கள் தன் முயற்சியின் பலாபலனை பெற்றுக் கொள்கின்றார்கள். இவைகள் நம் குறுகிய வாழ்க்கைவட்டத்திலே நாம் காணும் இப்படிப்பட்ட விதைப்பும் அறுப்பும் நம் குறுகிய வாழ்க்கை வட்டத்திலே நாம் காணும் பூமிக்குரிய பலன்களாக இருக்கின்றது. ஆதலால் இந்த உலகிலே காணப்படுகின்றவைகளால் உண்டாகும் பலன்களும் குறுகிய வாழ்க்கைவட்டத்திற்குரியதாகவே இருக்கின்றது. நம்முடைய இலக்கு காணப்படுகிறவைகளையல்ல. நம் மாம்ச கண்களால் காணப்படாத பரம தேசத்தை நாம் நோக்கியிருக்கின்றோம். அந்த பரம தேசத்தின் மேன்மையை பலனாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நிச்சியித்த பரிசுத்தவான்கள், பல துன்பங்கள் இன்னல்கள் மத்தியிலே கண்ணீரோடும், நீடிய பொறுமையோடும், விடாமுயற்சியோடும் தங்கள் வாழ்க்கையையே விதைத்தார்கள். கிறிஸ் துவினிமித்தம் வரும் பாடுகளை அதிக மேன்மை என்று எண்ணி, அவைகளை முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக் கொண்டார்கள். என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, இந்த உலகத்திலே உண்டாகும் விதைப்பிலும் அறுப்பிலும் நம்முடைய கண்களை பதிய வைக்காமல், இனி வரவிருக்கும் மேன்மையான பரலோக மகிமையை நம்முடைய நோக்கி முன்னேறுவோம். அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவத்தைக் குறித்து மனம் நொந்து கொள்ளாமல், அவைகளால் நமக்கு மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது என்பதை உணர்ந்தவர்களாக வாழக்கடவோம்.

**மத்தேயு 5:12**

**சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்;**

**ஜெபம்**: காணப்படாதவைகளாகிய நித்திய கனமகிமைக்கு அழைத்த தேவனே, பரலோகத்தின் மேன்மையை அறுவடை செய்வதையே என் இலககாக கொண்டு வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வெள்ளி \| ஐப்பசி 8 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 30:5 |
|---|---|

# வழிப்போக்கன்

ஒரு குறிப்பிட்ட ஊரை கடந்து கொண்டிருக்கும் ஒரு வழிப்போக்கனானவன், சாயங்காலமானதால், அந்த ஊரிலுள்ள தங்கும் விடுதியொனறில் இரவைக் கழித்தான். அதிகாலையிலே இருட்டோடே எழுந்து அவன் தன் வழியே போய்விட்டான். இதற்கொத்ததாகவே நமக்கு உண்டாகும் துன்பமும் ஒரு வழிப்போக்கனைப் போல இருக்கின்றது. சில வேளைகளிலே அழுகையின் பள்ளத்தாக்கைப் போன்ற அனுபவத்தை நாம் கடந்து செல்வதுண்டு. அந்த நோவுகள் நம்முடைய வாழ்வில் நிரந்தரமானவைகள் அல்லவே. இரவுக்கு விடியல் ஒரு எல்லையாக இருப்பது போல், நம்முடைய கண்ணீருக்கும் கர்த்தர் எல்லையை வைத்திருக்கின்றார். அவரிலே பெலன் கொண்டு, அவர் காட்டும் செவ்வையான வழியை தங்கள் இருதயத்தில் கொண்டிருக்கின்றவர்கள், அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள். மாலையிலே அழுகையோடு நித்திரைக்கு செல்கின்றவர்கள், கர்த்தருடைய புதுக் கிருபையினாலே காலையிலே மகிழ்ச்சியடைகின்றார்கள். முன்னோடிகளான பரிசுத்தவான்களில் சிலர், நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறி யாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புக்களிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். அப்படியானால், அவர்கள் யாவரும் தங்கள் வாழ்வில் விடியலைக் காணாமல் மரணத்தை சந்தித்தார்களா? அப்படியல்ல, சாயங்காலத்திலே நாம் நித்திரைக்கு செல்வதைப் போல, நீதிமான்களாகிய அவர்கள் உபத்திரவங்களோடும், கண்ணீரோடும் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் தேவசந்நிதியிலே மகிழ்ச்சியோடு எழுந்திருப்பார்கள். நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே வழிப்போக்கனைப் போல கடந்து போகும் துன்பத்தைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள்.

**மத்தேயு 13:43**

நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, ஒரு இரவைப் போல கடந்து போகும் இந்த வாழவின் துன்பங்களைக் கண்டு நான் சோர்ந்து போகாமல், உம்முடைய தயவினால் உண்டாகும் நீடிய வாழ்வை பெற்றுக் கொள்ள வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுடைய வீட்டார்

இந்த உலகமும் அதன் முறைமைகளும் நமக்கு வழிப்போக்கனைப் போலவும், நாம் இந்த உலகத்திற்கும் அதன் முறைமைகளுக்கும் வழிப்போக்கரைப் போலவும் இருக்கின்றோம். நிலையான நகரம் நமக்கு இந்த பூமியிலே இல்லை என்பதை நாம் ஒவ்வொரு நாளும் அறிக்கையிட வேண்டும். தேவனுடைய வீட்டாராக அழைப்பை பெற்றிருக்கும் நாம். இந்த உலகத்தின் போக்கிற்கு அந்நியரும் பரதேசிகளுமாக இருக்கின்றோம். (எபேசியர் 2:11, 1 பேதுரு 2:11) அவைகள் நம்மில் தங்குவதற்கு நாம் இடங் கொடுக்கக் கூடாது. கொஞ்சம் புளித்த மாவானது பிசைந்த மா முழுவதையும் உப்பப் பண்ணுவது போல, இந்த உலகத்தின் ஆசை நம் பரலோக பிரயாணத்தில் பெரும் நோவுகளை உண்டுபண்ணுவதோடு, அவை நம் ஆத்துமாவை கெடுத்துப் போடும். நாம் பரலோக யாத்திரிகளாக இருந்தால், இந்த உலகத்திலே நாம் இழந்து போக வேண்டிய பொருட்கள், உறவுகள், நட்புகள் உண்டு. நாம் இப்போது காணும் உலகமும் அதன் இச்சைகளுக்கும் பிசாசானவனே எஜமானனாக இருக்கின்றான். இரையைத் தேடிச் செல்லும் மீனானது, தனக்கு பிடித்த இரையை கண்டு கொண் டதும், அந்த இரையானது தூண்டில் வழியாக தனக்கு போடப்பட்டிருக்கும் கண்ணி என்பதை உணராமல் அதை கவ்விக் கொண்டதால் கண்ணியிலே அகப்பட்டுக் கொண்டது. இந்த உலகத்திலே கொஞ்சக் காலம் வாழும் நமக்கும், உயிர் வாழ்வதற்குரிய தேவைகள் பல உண்டு. இந்த உலகதிற்கு வழிபோக்கர்களாக இருக்கும் நாம், இந்த உலகத்திலே நம்முடைய பார்வைக்கு இன்பமாக இருப்பவைகளை ஆராய்ந்தறியாமல் அவைகளைப் பற்றிக் கொள்ளக் கூடாது. கர்த்தருடைய வார்த்தையானது நாம் மரணக் கண்ணிகளிலே சிக்கிக் கொள்ளாதபடிக்கு நம்மை எச்சரித்து நடத்துகின்றது. நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிரா தபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண் டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே உலக போக்கிற்கு விலக்கி உங்களை காத்துக் கொள்ளுங்கள்.

**ரோமர் 12:2**

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**ஜெபம்**: பரலோக தேவனே, பெரிதான அழைப்பைப் பெற்ற நான், இந்த உலகத்திற்குரிய காரியங்களை உம்முடைய வார்த்தையின் வழியாக அறிந்து விலகியோட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தீமையை எதினால் வெல்வது?

வாடகை வீட்டிலே வாழ்ந்து வந்த ஒரு மனிதனானவன், வீட்டுச் சொந்தக் காரரோடு ஏற்படுத்திய ஒப்பந்தத்திலுள்ள நியதிகளையும் நிபந்தனைக ளையும் முறைப்படி பின்பற்றி வந்தான். சில வேளைகளிலே, வீட்டுச் சொந்தக்காரர் அவனோடு கடுமையாக நடந்து கொண்டாலும், அதையும் சகித்துக் கொண்டு தன் நன் நடக்கையையும் நற்பண்புகளையும் விட்டு விடாதிருந்தான். ஆண்டுகள் சில கடந்து சென்றதும் அந்த கடுமையான வீட்டு சொந்தக்காரரும் அவனைக் குறித்து நற்சாட்சியை பகர்ந்து கொண்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் இந்த உலகத்திலே வாழும் வாழ்க்கையும் வாடகைவீட்டிற்கு ஒத்ததாயிருக்கின்றது. இந்தப் பூமியிலே நாம் வாழும்வரைக்கும், நாம் வாழும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு கர்த்தருக்குள் உட்பட்டிருக்கின்றோம். அதவாது, இன்று சில நாடுகளிலே, கர்த்தருடைய கட்டளைகளுக்கு விரோதமான கிரியைகளை சட்டபூர்வமாக்கியிருக்கின்றார்கள். வேதத்தின்படி செய்யாதே என்ற காரியத்தை, நீ செய்யலாம் என்று அனுமதித்திருக்கின்றார்கள். நாம் அவைகளுக்கு உட்பட்டவர்கள் அல்லர். அவைகளைத் தவிரவும் ஏனைய நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கின்றோம். எடுத்துக்காட்டாக, நாம் நாட்டின் சட்டதிட்ட த்திற்கமைய வருமான வரியை நாம் முறைப்படி செலுத்த வேண்டும். சில வேளைகளிலே அநியாயங்களை சகித்துக் கொள்ள நேரிட்டாலும், நாம் கர்த்தர் நிமித்தம் அவைகளை சகித்துக் கொண்டு, நெருக்கத்தின் மத்தியிலும் நம்முடைய நற்பண்புகளை நாம் வெளிக் காட்ட வேண்டும். நாம் இவ் உலகத்திற்கு வெளிச்சமாக நாம் ஏற்படுத்த ப்பட்டிருக்கின் றோம். இந்த உலகிலே பாவ இருள் சூழ்ந்திருக்கின்றது. அதாவது, அநியாயங்கள் எந்த மட்டத்திலும் நடைபெறலாம். ஆனால், அவைகள் மத்தியிலே நாமோ இந்த உலகத்தாரைப் போல வாக்கு வாதங்களிலும், சண்டைகளிலும் கலகங்களிலும் ஈடுபடாமல், நாம் கர்த் தருடைய வார்த்தையின்படி சுடர்விட வேண்டும். நாம் பாவம் செய்து அழிந்து போக வேண்டும் என்பதே எதிராளியாகிய பிசாசானவனின் திட்டம். அதற்கு நாம் உட்படாமல், நீங்கள் தீமையினாலே வெல்லப்ப டாமல், தீமையை வேத வார்த்தைகள் கூறும் நன்மையினாலே வெல்லு கின்றவர்களாக இருக்க வேண்டும். தீமை உங்களை மேற்கொள்ள ஒருபோதும் இடங்கொடாதிருங்கள்.

**1 பேதுரு 2:15**

**நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.**

**ஜெபம்**: நீங்கள் இந்த உலகத்தின் வெளிச்சமாகயிருக்கின்றீர்கள் என்று கூறிய தேவனே, அநியாயங்களைக் கண்டு நாம் தீமைக்கு தீமை செய்யாதபடிக்கு, உலகத்தில் சுடர்விடும் தீபமாக இருக்க எங்களை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| திங்கள் \| ஐப்பசி 11 | 📖 மாலை வாசகம் – எபிரெயர் 4:12 |
|---|---|

# வார்த்தையின் வல்லமை

ஒரு ஊரின் விவசாய திணைகளத்தினாலே அவ்வூரின் குடிமக்களுக்கு தோட்டம் செய்வதற்காக நல்ல விதைகளானது இலவசமாக விநியோகிக்கப்பட்டது. அந்த ஊர் மக்களில் சிலர், தங்கள் தோட்டத்தின் நிலத்தை நன்கு பண்படுத்தி விதைகளை விதைத்தார்கள். வேறு சிலரோ, விதை இலவசமாக தருகின்றார்களே என்பதற்காக அதை வாங்கி, தோட்ட த்தின் நிலத்தை நன்றாக பண்படுத்தாமல் அதே விதைகளை விதைத்தார்கள். விநியோகிக்கப்பட்ட விதைகள், எந்த தோட்டத்திலே நன்றாக விளையும்? நன்கு பண்படுத்த பட்ட நிலத்தில் அல்லவா? கர்த்தருடைய வார்த்தையானது விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. ஒரு வேளை இந்த உலகத்திலே விநியோகிக்கப் படும்பயிரினங்களின் விதைகள் குறைவுள்ளதாக இருக்கலாம் ஆனால் கர்த்தருடைய வார்த்தையானது சம்பூரணமானது. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. சத்தியமுள்ளது. பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. அருமருந்தும் ஔஷதமுமாக தேவனுடைய வார்த்தையானது, பாவத்தை பாவம் என்றும், நீதியை நீதியென்றும், அநீதியை அநீதியென்றும் வகையறுக்கின்றது. நம்மை தேற்றும் தேவ வார்த்தையானது, அவ்வப்போது நம்மை கண்டித்து தண்டித்து சீர்திருத்துவதற்கு வல்லமையுள்ளதாக இருக்கின் றது. ஆனால், தன் இருதயமாகிய நிலத்தை நன்கு பண்படுத்தி வைத்திருக்கின்றவனுடைய வாழ்விலே அந்தக் கண்டிப்பும், தண்டிப்பும், சீர்திருத்தலும் பலன் கொடுக்கின்றதாக இருக்கின்றது. எனவே உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவதற்கு இடங் கொடுங்கள். உங்கள் இருதயம் தேவனுடைய வார்த்தை விளையும் பண்படுத்தப்பட்ட நிலமாக இருப்பதாக.

**சங்கீதம் 19:11**

**அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.**

**ஜெபம்:** வார்த்தையை அனுப்பி குணமாக்கும் தேவனே, உம்முடைய வார்த்தையின் வழியாக நான் சீர்திருத்தம் அடைவதற்கு, வார்த்தையின் எச்சரிப்பை தாழ்மையோடு ஏற்றுக் கொள்ளும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஐப்பசி 12 — 📖 மாலை வாசகம் – 1 கொரி 6:19

# தேவனுடையது தேவனுக்கு...

ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, ரோமர்கள் யூதருடைய தேசத்தை ஆட்சி செய்து வந்தார்கள். ரோமருடைய சக்கரவத்தி இராயன் என்று அழைக்கப்பட்டான். யூதர்களில் அநேகமானோர், ரோமரையும் அவர்களுடைய வழிமுறைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தார்கள். அந்நாட்களிலே, யூத மதத் தலைவர்களில் சிலர், ஆண்டவராகிய இயேசுவின் பேச்சிலே அவரை குற்றம்பிடிக்கும்படிக்கு, தங்களில் சிலரையும், இராயனைப் பிற்றபற்றுகின்றவர்களில் சிலரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து: போதகரே, ரோமருடைய இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமானது அல்லவோ? நாம் கொடுக்கலாமோ, கொடுக்கக்கூடாதோ? என்று கேட்டார்கள். அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்து: நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படிக்கு ஒரு பணத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார். அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு அவர்கள் இராயனுடையது என்றார்கள். அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். இந்த உலகத்திலே நாம் வரிகளையும் நிலுவைகளையும் செலுத்தி வருகின்றோம். அதிகாரங்களுக்கு கொடுக்க வேண்டிய கனத்தை நாம் கிறிஸ்துவினிமித்தம் கொடுக்க வேண்டும் என்று கடந்த நாட்களிலே தியானித்தோம். இவை மனிதர்களுக்குரியவைகள். தேவனுக்குரியவைகள் எவை? பூமியின் அதின் நிறைவும் அதன் குடிகளும் கர்த்தருடையவைகள். இந்த உலகப் பொருட்களால் கர்த்தரை பிரியப்படுத்த முடியுமோ? நாம் காணும் வானமும் பூமியும் ஒருநாள் ஒழிந்து போகும். இந்த உலகத்திற்குரிய ரூபம் பொறிக்கப்பட்டது இந்த உலகத்திற்குரியது. அப்படியானால், தேவனுடைய ரூபம் எங்கே பொறிக்கப்பட்டிருக்கின்றது. மனிதன் தேவனுடைய சாயலிலும் அவருடைய ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டான். நாம் தேவனுடையவர்களாக இருக்கின்றோம். நாமே அவர் தங்கும் ஆலயமாக இருக் கின்றோம். தேவனுடையவர்கள் தேவனுடைய சத்தத்தை கேட்கின் றார்கள். எனவே, நம்மை நாம் முழுமையாக தேவனிடத்தில் ஒப்படைக்க வேண்டும். நம்முடைய இருதயத்தை தேவனுக்கு உகந்த காணிக் கையாக நாம் கொடுக்க வேண்டும்.

**மாற்கு 12:17**

**இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.**

**ஜெபம்**: தேவ சாயலாகும்படிக்கு நம்மை அழைத்த தேவனே, நான் உம்முடைய சாயலிலே நாள்தோறும் வளரும்படிக்கு என்னை முழுமையாக உம்மிடம் அர்ப்பணிக்கின்றேன். என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பாவிகளுக்கு புகலிடமானவர்

ஒரு குறிப்பிட்ட நாட்டிலே ஏற்பட்ட யுத்தத்தினால், அந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. அதனால், அந்ந நாட்டிலே, களவு, கொள்ளை மற்றும் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே சென்றது. அந்த நாட்டிலுள்ள ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டதால், இன்னுமொரு தேசமானது தன் வாசலைத் திறந்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டிலிருந்து அகதிகளை ஏற்றுக் கொண்டது. அகதிகளாக வந்தோர்க்கு, அந்த தேசத்திலே நல்வாழ்வை கண்டடையும் எல்லா வசதிகளும் இலவசமாக வழங்கப்பட்டது. அந்த தேசத்தின் குடியுரிமையை பெற்றுக் கொள்ளும் வழிகளும் ஏற்படுத்தப்பட்டது. அப்படியிருந்தும், அகதிகளாக வந்தோர்களில் சிலர், தங்கள் நாட்டில் செய்த பிரகாரமாக களவு, கொள்ளை மற்றும் வன்முறைகளைவிட்டுவிட மனதில்லாதவர்களாக இருந்தார்கள். அதனால் அவர்கள் அந்த தேசத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்கள். தேசத்தின் அதிகாரிகள் அவர்களை நோக்கி: நல்வாழ்வு வாழும்படி நாங்கள் அகதிகளுக்கு தஞ்சம் கொடுக்கின்றோம் ஆனால் அவர்களுடைய துன்மார்க்கமான நடவடிக்ககைகளுக்கு நாம் தஞ்சம் கொடுப்பதில்லை. அப்படியான நடவடிக்கைகள் இங்கு ஏற்றுக் கொள்ளப்படாது என்று கூறினார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு அநியாயயமாக வரி வசூலிப்பவர்களுடனும், பாவிகளுடனும் விருந்து உண்ணும் போது, யூத மதத் தலைவர்களில் சிலர் அவரை கடிந்து கொண்டார்கள். ஆண்டவர் இயேசு அவர்களை நோக்கி: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். ஆம், ஆண்டவர் இயேசு பாவிகளுக்கு புகலிடமாக இருக்கின்றார் ஆனால் அவர் பாவங்களுக்கு புகலிடம் கொடுப்பதில்லை. இனி வாழ்விற்கு வழியில்லை என்று பாவத்தில் மூழ்கியிருக்கும் பாவிகளுக்கும் அவர் விடுதலை கொடுக்கின்றார். ஆனால் இனி பாவம் செய்யாதே என்று எச்சரிக்கின்றார். பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கான வழிமுறைகளை ஏற்படுத்தியிருக்கின்றார். நமக்கு துணையாக இருக்கும்படிக்கு தேவ ஆவியானவரை ஈவாக கொடுத்திருக்கின்றார். எனவே தேவன் கொடுத்திரு க்கும் கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்த வேண்டும். பாவங்களுக்கு உங்கள் இருதயங்களை புகலிடமாக்காதிருங்கள்.

**லூக்கா 5:32**

**நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு அழைத்த தேவனே, நான் விட்டு வந்த பொல்லாத வழிகளுக்கு திரும்பாதபடிக்கும், அவைகளை நியாயப்படுத்தாதபடிக்கும் என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஏதேனின் மேன்மை

ஒரு ஊரிலே இருந்த பெரிதான மாளிகையைச் சூழ கனி தரும் மரங்களும், அழகான மலர்களும் வளர்ந்திருந்தது. பார்வைக்கு பச்சபசேல் என்று அவை பசுமையாக காணப்பட்டது. ஆனால் அந்த மாளிகை அழகாக காட்சியளிப்பதினால் மட்டும், அந்த மாளிகைக்குள் சமாதானம் இருக்கும் என்று கூறிவிடமுடியுமா? ஆதாம் ஏவாள் வாழ்ந்து வந்த ஏதேன் தோட்டத்தைக் குறித்து நாம் அதிகமாக பேசுவதுண்டு. ஏதேனின் மேன்மை என்ன? அதன் மரங்களும், கனிகளும், மலர்களுமோ? அவை மட்டுமல்ல அவைகளை விடமேன்மையானவைகள் அங்கே இருந்து. அவர்கள் தேவ சாயலுடையவர்களாக இருந்தார்கள். பாவமறியாதவர்களாக வாழ்ந்தார்கள். அவர்கள் மத்தியிலே தேவன் இருந்தார். தேவனுடை சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தையை அசட்டை செய்து, பிசாசானவனுடைய சத்தத்திற்கு கீழ்படிந்ததால், தேவன் கொடுத்த சமாதானமாக வாழ்வை இழந்து போனார்கள். தேவனோடு வாழாத வாழ்க்கை எதற்கு ஒப்பனையாக கூறப்படுகின்றது? அது வரண்ட வனாந்திரத்தைப் போலவும், முட்செடிகள் வளரும் பாழான நிலத்தைப் போலவும் காணப்படும். இந்த உலகத்திலே மனிதர்களுடைய வாழ்க்கை வனாந்திர வழிபோல் சவால் நிறைந்ததாக காணப்படுகின்றது. ஆனால் ஒரு மனிதன் தேவனோடு வாழ்பவனாக இருந்தால், அவன் வாழ்வு ஏதேன் போல மாற்றப்படும். நாம் இந்த உலகத்திலே இருக்கும் வரை, வெளிலே இந்த உலகத்தின் தீமைகளைக் காண்கின்றோம். இந்த உலகத்திலே உபத்திரவங்கள் உண்டு. எனினும், நாம் பிரதியச்சமாக முகமகமாய் கர்த்தரை தரிசித்து அவரோடு நீடுழியாய் வாழும் நாள் வரும். அந்த நாள் வரைக்கும், நாம் தேவனோடு வாழும் வாழ்க்கையை நமக்கு ஏற்படுத்திக் கொடுதிருக்கின்றார். நாம் தேவன் தங்கும் ஆலயமாக இருக்கின்றோம். அவர் நமக்குள்ளே வாசம் செய்து, வறண்ட வாழ்க்கையை ஏதேனைப் போல மாற்றுகின்றார். அந்த அனுபவத்தை, சந்தோஷத்தை, நிம்மதியை அவர் கட்டளையிடுகின்றார். அவருடையவார்த்தையை தள்ளிவிட்டதால் ஆதாம் ஏவாள் அந்த வாழ்கவை இழந்து போனார்கள். ஆனால் நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கைக்கொள்ளும் போது, இழ ந்து போன ஏதேன் அனுபவத்தை நாம் நம் வாழ்வில் கண்டு கொள்ளலாம்.

**ஏசாயா 51:3**

அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்;

**ஜெபம்**: வறண்ட வாழ்க்கையை செழிப்பாக மாற்றும் தேவனே, உம்முடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நடப்பதினால் உண்டாகும் சமாதானத்தை உணர்ந்து கொள்ளும் பாக்கியத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனப்பூர்வமாய் மன்னியுங்கள்

மகா நகரமாகிய நினிவேயின் அக்கிரமம் மிகுதியானதானால் தேவனாகிய கர்த்தர் அந்த நகரத்தின் மேல் நியாயத்தீர்ப்பு செய்யும்படி எழுந்தருளினார். தான் நினைத்ததை செய்வதற்கு முன்னதாக, தம்முடைய தீர்க்கதரிசியாகிய யோனாவை அவர்களிடத்தில் அனுப்பி, அவர்களை எச்சரித்தார். யோனா அவர்களை நோக்கி: இன்னும் நாற்பதுநாள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவேயின், ராஜாவும், அவனுடைய ஊழியர்களும், ஜனங்களும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, தேவன் முன்னிலையில் தங்களை தாழ்த்தி, பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பி, உபவாசித்து ஜெபித்தார் கள்.

**யோனா 3:10**

**தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்.**

தேவன் அவர்கள் மனந்திரும்புதலைக் கண்டு அவர்களுக்கு இரங்கினார். நினிவேயின் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்பின் செய்தியோ தேவ கிருபையாக இருந்தது. அந்தக் கிருபையை அவர்கள் அசட்டை செய்யாமல், முரட்டாட்டம் பண்ணாமல், பிரயோஜனப்படுத்திக் கொண்டார்கள். இன்றைய நாட்களிலே, மனிதர்கள் தேவனுடைய எச்சரிப்பை தேவ கிருபையாக கருதுவதில்லை. தங்கள் வழிகளை குறித்து எச்சரிப்பைக் கூறும் சபை ஊழியரின் சத்தத்திற்கு செவி சாய்த்து, தங்கள் வழிகளை ஆராய்ந்து மனதிரும்புவதற்கு பதிலாக, தேவ வார்த்தையின்படி எச்சரிப்பை வழங்கும் சபை ஊழியர்களை பகைத்து, முரட்டாட்டம் பண்ணிக் கொண்டு, தூர தேசங்களிலிருக்கும் தங்கள் வழிகளை அறியாதவர்களின் செய்திகளை இன்ரநெற் வழியாக கேட்டு திருப்தியடைகின்றார்கள். தங்கள் காதுகளுக்கு எவை இனிமையாக இருக்கின்றதோ அதையே கேட்க விரும்புகின்றார்கள். பிரியமானவர்களே, சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் பிள்ளைகளின் போக்கை நன்றாக அறிந்த நீங்கள் அவர்களுக்கு எச்சரிப்பை வழங்குகின்றீர்கள். அந்த எச்சரிப்பு அவர்களின் அழிவுக்காக அல்ல, அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்வதற்காகவே அப்படி செய்கின்றீர்கள். அதுபோலவே நம்முடைய பரம பிதாவும், நம்மேல் அன்புகூர்ந்து, நாம் அழிந்து போகா மல் இருக்கும்படிக்கு உங்களுக்கு எச்சரிப்பை வழங்கும் போது, உங் கள் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். அப்போது நீங்கள் தெளி வாக பார்க்கும்படிக்கு தேவன் உங்கள் கண்களை பிரகாசமுள்ளதாக்குவார்.

**ஜெபம்**: கிருபையுள்ள தேவனே, நீர் உம்முடைய எச்சரிப்பின் சத்தத்தை அனுப்பும் போது, நான் என் இருதயத்தை கடினப்படுத்தாமல்,என்னை தாழ்த்தி உம்மை கிட்டிச் சேர என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அதிசயமான வழிகள்

தேவனுடைய ஜனங்கள் சுமார் 400 வருடங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆளோட்டிகளால் கடுமையாக நடத்தப்பட்டார்கள். ஆனாலும் பல தலைமுறையாக எந்தவிதமான யுத்தம் செயத அனுபவங்களும் அற்றவர்கள். யுத்தத்தில் ஒருபோதும் நிற்காதவர்கள். உங்களுக்கு ஒரு செழிப்புள்ள தேசத்தை தருவேன் என்று தேவனாகிய கர்த்தர் அவர்களின் முற்பிதாக்களுக்கு கொடுத்த வாக்கை நம்பி அவர்கள் புறப்பட்டார்கள். அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திலே பராக்கிரமமுள்ள பலத்த மனிதர்கள் இருந்தார்கள். தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலர் இருந்த நிலைமையின்படி, இந்த உலகத்தின் பார்வையிலே அந்த தேசத்தைசுதந்தரித்துக் கொள்வது ஒரு கற்பனைக் கதை. அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று அணியணியாய் புறப்பட்டார்கள். பிள்ளைகள் தவிர, புருஷர்கள் மட்டும் ஆறு இலட்சம் பேர். இவர்கள் சமுத்திரத்தின் கரையிலே பாளயம் இறங்கினார்கள். அத் தனை இலட்சம் ஜனங்கள் சமுத்திரத்தை கடப்பதற்கு எத்தனை கப்பல் தேவைப்படும்? இந்த அறிவு இல்லாமல், அவர்களை நடத்திய தலைவன் அவர்களை கடல்கரைக்கு வழிநடத்தினானா? என்று இந்த உலகத்தார் சிந்திக்கலாம். ஆனால் அங்கே தேவனாகிய கர்த்தர் கடலை இரண்டாக பிளந்து, ஜனங்களை வெட்டாந்தரையில் நடப்பது போல நடந்து போகப் பண்ணினார். இப்படிப்பட்ட செயலை முன்பு அவர்களில் ஒருவரும் கண்டதுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை, அது அவர்கள் விசுவாசத்திற்கு அப்பாற்பட்ட காரியமாக இருந்தது. இதுவே தேவ னாகிய கர்த்தருடைய வழி. சமுத்திரத்திலே கப்பல் இந்த பதையால் வந்து, இந்த பாதையால் போனது என்று அடையாளம் இருப்பதில்லை. அதுபோலவே கர்த்தருடைய வழிகளும் இருக்கின்றது. கர்த்தருடைய வழிகள் ஆழமறியாத கடலைப் போன்றது. அவருடைய வழிகள் ஆச்சரி யமானவைகள். அவருடைய வழிகள் மனிதனுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவைகள். எனவே, அவர் சொன் னதை நிறைவேற்றும்வரைக்கும் அவருடைய வார்த்தையை நம்பிக் காத்திருங்கள். அவர் சொன்னதை செய்து முடிக்கின்ற தேவனாயிருக்கின்றார்.

**பிரசங்கி 11:5**

ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்.

**ஜெபம்**: அதிசயம் செய்யும் தேவனே, மனிதர்களுடைய வழிகளின் முடிவிலே அழிவு உண்டு, உம்முடைய வழியிலே செல்கின்றவர்களுக்கு நித்திய வாழ்வு உண்டு. உம்முடைய வழிகளை எனக்குப் போதித்தருளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாச சோதனையில் வெற்றி

அனுதினமும் நம்முடைய வாழ்வை அழுத்தும் பாரங்கள் அதிகமா யிருப்பதாலும், நாம் நினைத்த காரியம் கைகூடாமல் தாமதிப்பதினா லும், சில வேளைகளிலே நாம் சோர்ந்து போய்விடுகின்றோம். அந்த வேளைகளிலே மனதிலே பலவிதமான அவிசுவசத்திற்குரிய யோசனை கள் தோன்றும். ஆபிரகாமிற்கும் சாராய்க்கும் பிள்ளைகளில்லா திரு ந்தபோது, அவர்களுக்கு அவர் கள் வழியாக பெரிய சந்ததியையொ ன் றை ஏற்படுத்துவேன் என்று தேவ னாகிய கர்த்தர் வாக்குரைத்தார். அவ ர்கள் முதிர்வயதானபோது, சாராள் கர்பப்பிறப்பாலல்ல வேறுவழியாக தங்களுககு சந்ததி உருவாகும் என் றாள். சாராளின் வார்த்தைக்கு ஆபி ரகாம் செவிகொடுத்தான். ஆனால் கர்த்தர் சாராள் முதிர்வயதானபோது அவள் வழியாகவே ஆபிராகாமுக்கு ஒரு பிள்ளையைக் கொடுத்தார். இவ்வண்ணமாகவே, உங்களுடைய வாழ்விலும் தேவனுடைய வாக்கு த்தத்த்தைக் குறித்த சந்தேகங்கள் எழும்பலாம். "ஆண்டவர் நித்திய காலமாய்த் தள்ளிவிடுவாரோ? இனி ஒருபோதும் தயை செய்யாதிருப் பாரோ? அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? வாக் குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபே யிற்றோ? தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்க மான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ?" என்று தேவ பக்தன் தன் சங்கீதத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். இப்படியாக சிந்தனைகள் உங்களை நெருக்கும் போதெல்லாம், அது உங்களுடைய பெலவீனம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அந்த வேளைகளிலே, தேவனுடைய வழிகளைக் குறித்து தியானம் செய்யுங்கள். அவர் செய்த பலத்த செயல்களை நினைவுகூருங்கள். வேதத்திலே காணும் பரிசுத்தவான்க ளின் வாழ்க்கையிலே அவர் செய்த அதிசயங்களையும் மட்டுமல்ல, உங்கள் வாழ்விலே இதுவரைக்கும் செய்த அதிசயங்களை தியானி யுங்கள். அவருடைய ஈவுகளை ஒவ்வொன்றாய் சொல்லித் துதியுங்கள். "தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது. நம்முடைய தேவ னைப்போல பெரிய தேவன் யார்? அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே. ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப்பண் ணினீர்." என்று அவருடைய மகத்துவங்களை அறிக்கையிடுங்கள். விசுவாச சோதனையை ஜெயங்கொள்ளுங்கள்.

**சங்கீதம் 77:11**

**கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்மு டைய பூர்வகாலத்து அதிச யங்களையே நினைவுகூரு வேன்;**

**ஜெபம்:** வழிநடத்தும் தேவனே, வேதத்திலே காணப்படும் மேகம் போன்ற திரளான சாட்சிகளையும், என் வாழ்விலே நீர் செய்த நன்மைகளையும் நான் தியானித்து, உம்மைத் துதிக்க உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜீவ ஓட்டமும் போராட்டமும்

நமக்கு நியமிக்கபட்ட ஓட்டப் பந்தயம் இருக்கின்றது. அந்த பந்தய த்திலே நமக்கு போராட்டம் உண்டு. ஓட்டப்பந்தையத்திலே ஓடுவதற்கு நம்முடைய கால்கள் பெலனுள்ளதாக இருக்க வேண்டும். போரா ட்டத்திலே ஜெயிக்க எங்கள் கைகள் உறுதியுள்ளதாக இருக்க வேண் டும். நம்முடைய ஓட்டம் நித்திய ஜீவன் என்னும் இலக்கை நோக்கி யிருக்கின்றது. நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாரத்தையும், பாவத்தை யும் தள்ளிவிட்டு, விசுவாச த்தைத்து வக்குகிறவரும் முடிக்கிறவ ருமாயிரு க்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறு மையோடேஓடவேண்டும். அந்த இல க்கை நோக்கி செல்லும் போது நாம் சத்துருவானவனை எதிர்த்து போர் செய்ய வேண்டும். மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்க ளோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானம ண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்ற வைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமு ள்ளவைகளாயிருக்கிறது. நீங்கள் சீராக ஓடமுடியாமலும், முன்னேறிச் செல்லமுடியாமலும் உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் உங்கள் முழங்கால்களை தளர்த்தும் பெலவீனம் என்ன? நீங்கள் சத்துருவின் தந்திரங்களை எதிர்த்து போராட முடியாமல் உங்கள் வாழ்க்கையிலே உங்கள் கைகளை தளர்ந்து போகப் பண்ணும் பாவம் என்ன? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தும்படிக்கு வேதம் கூறும் ஆலோசனை என்ன? 1. முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ் தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுதத வேண்டும். 2. யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவ ர்களாயிருக்கவும் நாட வேண்டும். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்த ரைத் தரிசிப்பதில்லையே. 3. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ள வேண்டும். இந்த ஜீவ ஓட்டத்திலும், சத்துருவை எதிர்த்து போராடும் போராட்டத்திலலும் தேவ ஆவியானவர் உங்களுக்கு துணையாளராக இருக்கின்றார்.

**எபிரெயர் 12:12**

ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும், தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி,

**ஜெபம்**: என் கால்களை தள்ளாடாமல் காக்கும் தேவனே, என் வாழ்வி லிருக்கும் வேதனை உண்டாக்கும் வழிகளை நான் விட்டு விடும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்

**நீதிமொழிகள் 3:6**

**உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.**

"உன் வழிகளிளெல்லாம் கர்த்தரை நினைத்துக் கொள்" என்பதன் பொருள் என்ன? நான் வேலைக்கு, பாடசாலைக்கு, கடைக்குச் செல்லும் போதும் அங்கிருந்து திரும்பும் போதும் மட்டும் கர்த்தரை நினைத்துக் கொள்வதா? முதலாவதாக "வழிகளெல்லாம்" என்பதன் பொருள் என்ன என்பதை அறிந்து கொள்வோம். நம் வாழ்வில் நாம் முன்னெடுக்கும் எல்லாச் செயல்களிலும் எனக்கு வாழ்வு கொடுக்கும் கர்த்தரை மறந்து விடக்கூடாது. முக்கியமாக, நாம் கர்த்தருடையவர்கள், நம் வாழ்வின் எல்லாத் தீர்மானங்களிலும் கர்த்தரே மையமாக இருக்க வேண்டும். எடுத்துக்காடாக, நான் எதை படிக்க வேண்டும்? எந்த கல்லூரியிலே படிக்க வேண்டும்? நான் எப்படிப்பட்ட உத்தியோகத்தை செய்ய வேண்டும்? எங்கே செய்ய வேண்டும்? என்பது நம்முடைய வாழ்வில் நடக்கும் சில செயற்பாடுகள். "நினைத்துக் கொள்" என்பதன் பொருள் என்ன? கர்த்தாவே கூட இரும் என்று சொல்லிவிட்டு எனக்கு விருப்பமானதை செய்து முடிப்பதா? அப்படியல்ல, அவருடைய ஆலோசனைகளை நான் ஏற்று, அதன்படிக்கு என் வாழ்வின் தீர்மானங்களை நான் எடுத்துக் கொள்ள வேண்டும். தேவனாகிய கர்த்தரை அறியாத ஜனங்கள், திருமணம் சம்பந்தத்தை செய்ய முன்பு, தங்கள் முன்னோரது பாரம்பரியத்தையும், தங்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட பொருத்தங்களையும் கருத்தோடு ஆராய்ந்து பார்க்கின்றார்கள். அவர்கள் தங்களது அறியாமையிலே வாழ்ந்தாலும், தங்கள் வழிமுறைகளிலே மிகவும் வைராக்கியம் பாராட்டுகின்றார்கள். இதற்கொத்ததாக ரேகாபியருடைய சந்ததியை குறித்து கர்த்தர் ஏரேமியா தீர்க்கரிசியின் நாட்களிலே கூறியிருக்கின்றார் (ஏரோமியா 35ம் அதிகாரம்) ஆனால் தேவனாகிய கர்த்தரை அறிந்த ஜனங்களில் சிலர், திருமண ஒப்பந்தங்களிலே, தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தங்கள் சுயபுத்தியின்படி தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். கர்த்தர் செய்யாதே என்று கூறிய காரியங்களைச் செய்துவிட்டு, கர்த்தர் அதை ஆசீர்வதிக்க வேண்டும் என்று விரும்புகி ன்றார்கள். பல ஆண்டுகளுக்கு பின்போ, தங்கள் சொந்த தீர்மானங்களினாலே வரும் பாதகமான விளைவுகளை காணும் போது, கர்த்தர் இதை ஏன் அனுமதித்தார் என்று கூறிவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, உங்கள் பாதைகளை செவ்வைப் படுத்தும் தேவ ஆலோசனையின் வழியிலே நடவுங்கள்.

**ஜெபம்**: ஆலோசனை தரும் தேவனே, என்னை நான் ஞானி என்று எண்ணிக் கொள்ளாமலும், மதியீனமான தீர்மானங்களை என் வாழ்விலே நான் எடுக்காதபடிக்கும் என்னை நீர் காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.